*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*31 07 2025 THURSDAY 12 40 PM*

*ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>*
***<u>தலைப்புச் செய்திகள்</u>***

1. ***மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆற்றிய உரை, ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றி குறித்த அரசின் நிலைப்பாட்டை தெளிவாக உணர்த்துவததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.***

2. ***மகளிர் சுயஉதவி குழுவினருக்கு 11 லட்சம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது.***

3. ***சூரியசக்தி மின் உற்பத்தியில், இந்தியா உலக அளவில் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.***

4. ***மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 பேரையும் விடுவித்து தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.***

5. ***மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தருண் மன்னெபள்ளி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

*>>>>>>>><<<<<<*

***மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆற்றிய உரை, நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றி குறித்த அரசின் நிலைப்பாட்டை தெளிவாக உணர்த்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.***

***திரு. அமித் ஷா-வின் உரையை தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், அவரது உரை தனித்துவமானது என்று குறிப்பிட்டுள்ளார்.***

***இதேபோன்று, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரின் உரையையும் பாராட்டியுள்ள திரு. நரேந்திர மோடி, இந்தியா எதிர்கொள்ளும் தீவிரவாத பிரச்சினைகளை உலகின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கான அரசின் முயற்சிகளை அவர் தெளிவாக விளக்கிக் கூறியிருப்பதாக தெரிவித்துள்ளார்.***

***நாட்டு மக்களை பாதுகாக்க, எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ள இந்தியா தயங்காது என்பது, ஆப்பரேஷன் சிந்தூர் வாயிலாக உலகிற்கு உணர்த்தப்பட்டிருப்பதை திரு. ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்திருப்பதற்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.***

*>>>>>>>><<<<<<*

***பண்டைக்கால அறிவாற்றல் மற்றும் தற்கால எதிர்பார்ப்புகளின் சங்கமமாக நாடு திகழ்வதை இந்திய தகவல் பணி அதிகாரிகள் மக்களுக்கு ஆதாரபூர்வமாக எடுத்துரைக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.***

நாடாளுமன்ற நடவடிக்கைகள் குறித்து அறிந்து கொள்ள வந்த இந்திய தகவல் பணி பயிற்சி அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், பரந்து விரிந்த, பன்முகப்பட்ட மற்றும் ஆற்றல்மிக்க நாட்டில் தகவல் பணி என்பது அதிகாரம் அல்ல என்றும் அதை ஒரு பொறுப்பாக கருத வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

நாடாளுமன்ற செயல்பாடு குறித்த அனுபவங்கள், துடிப்புமிக்க இளம் அதிகாரிகள் சிறப்பாக பணியாற்ற உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில், பொதுமக்களிடம் எப்படி பேச வேண்டும் என்பதையும், புதிய இந்தியாவின் வளர்ச்சியையும் எடுத்துக் கூறும் பொறுப்பு இந்த அதிகாரிகளுக்கு இருப்பதாகவும் திரு. ஓம் பிர்லா சுட்டிக்காட்டினார்.

>>>>>>><<<<<<

*Nisar* செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியிருப்பதற்காக நாடாளுமன்ற இரு அவைகளிலும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மக்களவை இன்று காலை கூடியதும், இந்த புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை வெற்றிகரமாக செலுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வாழ்த்து தெரிவித்தார்.

இஸ்ரோ விஞ்ஞானிகளின் எதிர்கால முயற்சிகளும் வெற்றிபெற அவையின் சார்பில் வாழ்த்துவதாக அவர் குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில், இஸ்ரோ – நாசாவின் கூட்டு முயற்சியான இந்த செயற்கைக்கோள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதற்கு அவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் சிங் வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

>>>>>>><<<<<<

ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும், தீன்தயாள் அந்தியோதயா – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், மகளிர் சுயஉதவி குழுவினருக்கு இதுவரை 11 லட்சம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கிராமங்களில் சுயசார்பை ஏற்படுத்துவதற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை பூர்த்தி செய்யம் வகையில் இந்த கடனுதவி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் பெண்களுக்கு நிதி அதிகாரமளித்து, உள்ளடக்கிய கிராமப்புற வளர்ச்சியை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

சூரியசக்தி மின் உற்பத்தியில், இந்தியா உலக அளவில் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கடந்த 2014ஆம் ஆண்டு 2 புள்ளி எட்டு ஜிகாவாட்டாக இருந்த சூரியசக்தி மின்உற்பத்தி, தற்போது 117 ஜிகாவாட்டாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, இது சாத்தியமானதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மஹாராட்டிர மாநிலம், மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 பேரையும், தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றம் விடுவித்துள்ளது.

நாசிக் மாவட்டம், மாலேகானில் கடந்த 2008ஆம் ஆண்டு நேரிட்ட மோட்டார் சைக்கிள் குண்டுவெடிப்பில் ஆறு பேர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்தனர்.

17 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் இன்று தீர்ப்பளித்த சிறப்பு நீதிமன்றம், குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றது போல, இந்த சம்பவத்தில் 101 பேர் காயமடையவில்லை என்றும், 95 பேர் தான் காயமடைந்ததாகவும் கூறியுள்ளது.

மருத்துவச் சான்றிதழ்கள் திருத்தப்பட்டதாகவும், மோட்டார் சைக்கிளில் குண்டு வைக்கப்பட்டதற்கான உறுதியான ஆதாரத்தை அரசு தரப்பு தாக்கல் செய்ய தவறிவிட்டதாகவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பாதுகாப்புத்துறை ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த இந்தியாவும், பிரேஸிலும் முடிவு செய்துள்ளன.

இருநாட்டு கூட்டு பாதுகாப்புக் குழுவின் எட்டாவது கூட்டம். பிரெஸீலியாவில் நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை இணைச் செயலாளர் திரு. Vishwesh Negi மற்றும் பிரேஸில் ராணுவ துணைத் தளபதி மேஜர் ஜெனரல் Willain Koji Kamei உள்ளிட்டோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதில், இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பு, பயிற்சி, பாதுகாப்பு தளவாட தொழிற்சாலைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, இந்தோ – பசிபிக் மற்றும் லத்தின் – அமெரிக்க மண்டல அளவிலான பாதுகாப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior அரசுமுறைப் பயணமாக அடுத்த வாரம் இந்தியா வரவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஆகஸ்ட் 4ஆம் தேதி முதல் 8ஆம் தேதிவரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பிலிப்பைன்ஸ் அதிபர், ஆகஸ்ட் 5ஆம் தேதி பிரதமரை சந்தித்து பேசவுள்ளார்.

*ராணுவம் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பு குறித்த அம்சங்கள் இந்த பேச்சுவார்த்தையில் முக்கிய இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் உள்ளிட்ட தலைவர்களையும் பிலிப்பைன்ஸ் அதிபர் சந்திக்கவுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*தெலங்கானா மாநிலத்தில் BRS சட்டப்பேரவை உறுப்பினர்கள் 10 பேரை தகுதிநீக்கம் செய்து குறித்து மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்குமாறு அம்மாநில சட்டப்பேரவை தலைவருக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.*

*BRS கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த உறுப்பினர்கள், ஆளும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்ததை அடுத்து, அவர்களை தகுதிநீக்கம் செய்ய உத்தரவிடக் கோரி, அக்கட்சியின் செயல்தலைவர் திரு. K.T. ராமாராவ் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*தடை செய்யப்பட்ட Satellite தொலைபேசி வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், அமெரிக்க மாணவர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*நள்ளிரவு மணி 12.30-க்கு சிங்கப்பூர் வழியாக ஆஸ்திரேலியா செல்வதற்காக வந்த Oakley Jackson என்பவரிடம் விமான நிலைய அதிகாரிகள் நடத்திய வழக்கமான பாதுகாப்பு சோதனையின் போது, அவரிடம் Satellite தொலைபேசி இருப்பது கண்டறியப்பட்டது.*

*அமெரிக்காவில் பல்கலைக்கழகம் ஒன்றில் பயின்று வரும் Oakley Jackson சுற்றுலா விசா மூலம், தில்லி வழியாக கடந்த வாரம் சென்னை வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*மோசமான வானிலை காரணமாக, அமர்நாத் புனித யாத்திரை இன்றும் ஒத்தி வைக்கப்பட்டது.*

*யாத்திரை செல்லும் வழியில், தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், இந்த யாத்திரை நேற்று ரத்து செய்யப்பட்ட நிலையில், இரண்டாவது நாளாக இன்றும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தருண் மன்னெபள்ளி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 19-21, 21-14, 22-20 என்ற செட்கணக்கில் ஹாங்காங்-ன் Lee Cheuk Yiu-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*

***உலக கயிறு தாண்டுதல் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கம் வென்றது.***

*>>>>>>><<<<<<*

***கிரீஸின் ஏதென்ஸில் நடைபெற்று வரும், 17 வயதுக்குட்பட்டோருக்கான மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Rachana, Moni, Ashvini, Kajal இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.***

*>>>>>>><<<<<<*

***சவுதி அரேபியாவின் ரியாதில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Nihal Sarin காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

*>>>>>>END<<<<<<*